**கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிறு ஒழுங்கைகள் பாலங்கள் மதகுகள் என்பவற்றின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 228,349,366 ஆக இருந்த போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 7,679,560 ஆக காண்பிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் செலவினம் ரூபா 220,669,806 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் ஒழுங்கைகள் பாலங்கள் மதகுகளின் மீள் மதிப்பிடப்பட்ட பெறுமதி முறையாக இனங்காணப் படாமையால் எதிர் காலத்தில் தயாரிக்கப்படும் ஒழுங்கைகள் பாலங்கள் மதகுகள் பெறுமானத்தின் மீது பெறுமானத்தேய்வு செய்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுத்து இவ்வாறு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | பெறுமானத்தேய்வு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கை பதிவேட்டின் பிரகாரம் நடைமுறை வேலைகள் கணக்கின் மீதி ரூபா 25,382,937 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 31,417,399 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 6,034,462 கூடுதலாக கடன்கொடுத்தோர் மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த சீராக்கங்களை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | கடன்கொடுத்தோர் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 67,500 ஆன நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த சீராக்கங்களை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | நூலகப் புத்தகங்களின் நன்கொடை சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்த மூலதன மானியங்களுக்கா 2021 ஆம் ஆண்டின் போது காலக் கழிவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 8,157,566 ஆக இருந்த போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 5,493,069 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 2,664,497 ஆல் ஆண்டின் செலவினம் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | காலக்கழிவு ஆண்டின் மூலதன மானியம் அவ்வாண்டிலேயே விரிவான வருமானக் கூற்றில் இனங் காணப்படுகின்றமையால் 2020 மற்றும் 2021 மூலதன மானியங்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/8 ஆம் இலக்க மாகாண சபையின் வர்த்தமானி பத்திரத்தின் 194 ஆம் பிரிவின் அறிவுறுத்தலின் பிரகாரம் குறித்த சீராக்கம் சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் சபை அதிகாரப் பிரதேசத்தில் பெருந்தெருக்களை விரிவாக்குவதற்காக சபைக்கு கிடைத்த இழப்பீட்டுத் தொகை ரூபா 33,135,650 ஏனைய வருமானமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஒதுக்கம் மற்றும் ஒதுக்கீட்டு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இழப்பீட்டு தொகையை பெறுவதற்குரிய சொத்துக்களின் பெறுமதி முறையாக இனங் காணப்படாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த சீராக்கத்தை செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டில் மூலதன மானியத்தின் கீழ் செலவிடப்பட்ட சிறுவர் பூங்கா செலவினம் ரூபா 4,487,891 கணக்கீடு செய்யாமை காரணமாக சொத்துக்கள் ரூபா 4,487,891 குறைத்தும் பெறுமானத் தேய்வு ரூபா 448,789 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபையின் நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமாத்தேய்வு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | சபைக்கு உரிய டி.பி இலங்கரத்ன விளையாட்ட ரங்கின் பார்வையாளர் மண்டபத்தில் உட்கூரை மற்றும் மழை பீலி அடிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,325,367 தொகை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சொத்தொன்நறாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | சொத்துக்கள் முறையாக இனங் காணப்பட்டு அச் சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஏ) மீளாய்வாண்டின் விரிவான வருமானக்கூற்றின் பிரகாரம் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 27,916,190 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | மேற்படி | பெறுமானத்தேய்வினை சரியாக கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) ஆண்டில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு ரூபா 93,324,906 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | மேற்படி | முதலீட்டு செயற்பாடு களின் கீழ் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் நிலுவையில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளான ரூபா 138,640,414 ஆக இருந்த போதிலும் அனைத்து சீராக்கங்களும் மேற்கொண்ட பின்னர் இறுதி மீதி ரூபா 212,623,735 ஆக இருந்ததால் ரூபா 73,983,321 ஆன வேறுபாடு அவதானிக்கப் பட்டது. | மேற்படி | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) ஆண்டில் மூலதன மானியப் பெறுவனவு ரூபா 40,279,099 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்படி | மூலதன பெறுவனவு களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 3 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி மற்றும் அட்டவணையின் பிரகாரம் பெறுமதிக்கு இடையே ரூபா 77,275,778 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆவணங்களையும் அட்டவணைகளையும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,111,697 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 645,242,866 ஆக இருந்தமையால். மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 720,354,563 ஆல் அதிகரித்திருந்தமை இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும்<br>மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகவிருந்த வீதவரி மற்றும் வருமானம் ரூபா 60,673,270 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 40,000 இற்கு மேற்பட்ட நிலுவை பெறுமதியுடைய 25நிலுவை மீதிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 5,035,656 ஆக இருந்தது. | நிலுவை வீதவரி தொகையிலிருந்து ரூபா 1,596,585 அரசின் ஆதனங்களாக இருந்ததுடன் அது மொத்த நிலுவையில் 2.6 % ஆகும். குறித்த அரச நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இதுவரை இரண்டு ஆதனங்கள் முழு நிலுவையைம் செலுத்தியிருந்ததுடன் எஞ்சிய நிலுவையை பகுதி பகுதியாக கொடுப்பனவு செய்யப்படுகின்றதாக தயவுடன் அறியத் தருகின்றேன்.<br>2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஒப்பீட்டு ரீதியான நாட்டில் காணப்பட்ட கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டமை போன்ற செயற்பாடுகள் காரணமாக வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்ககை எடுக்க முடியாது இருந்தது. இதுவரை வீதவரி வருமானம் நடமாடும் நிகழ்ச்சிகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் களை ஈடுபடுத்தி ஆதனங்களை தடை செய்தல் மூலம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | வருடக் கணக்கிலுள்ள அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) கடை வாடகை

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 33 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய மொத்த நிலுவை வாடகை ரூபா 5,244,196 இலிருந்து எவ்வித கடை வாடகையும் அறவிடப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் புதிய கடை வாடகை திருத்தம் செய்வதற்கு முன்னர் காணப்பட்ட மதிப்பீட்டின் மீது 300% சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாக குத்தகையாளர்கள் இந்த வாடகைக் கொடுப்பனவை தவிர்ப்பு செய்திருந்தனர். அவர்களால் வாடகையை மதிப்பீட்டினை திருத்தி தருமாறு கோரியிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆளுனரால் விலை மதிப்புத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திருத்தங்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் விலை மதிப்புத் திணைக்களத்தினால் திருத்தம் 10% வீதத்தினால் கழிக்கப்பட்டு அனுப்பியிருந்த போதிலும் அது தொடர்பாக குத்தகையாளர்கள் திருப்தியடையவில்லை. இவ்விடயம் தொடர்பாக நாளுக்கு நாள் குத்தகையாளர்கள் மற்றும் சபையின் கலந்துரையாடியிருந்த துடன் இறுதியில் பொதுச் சபையின் முன்மொழிவொன்று நிறைவேற்றப்பட்டதன் மூலம் இத்திருத்தத் தொகை பகுதி பகுதியாக அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | கடை வாடகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்தவர் களிடமிருந்து கடைகளை மீள பெற்றுக் கொள்ளல் போன்ற மாற்று முறைமை மூலம் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு விரைவுபடுத்த வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டம்

| | | |
|---|---|---|
| கடந்த 05 ஆண்டுகள் முதல் சபைக்கு எவ்வித நீதிமன்ற தண்டப்பணமும் கிடைக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா | கடந்த ஆண்டிற்குள் சபைக்கு நீதிமன்ற தண்டம் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு அதற்குரிய அறிக்கை மீண்டும் பரீட்சிப்பதற்கு கொழும்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி | காலம் கடப்பதற்கு முன்னர் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிடுவதற்கு விரைவுபடுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| 11,410,860 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | வைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அந்த அறிக்கை பரீட்சிக்கப்பட்டு குறித்த பணத்தை சபைக்கு அனுப்பாமை காரணஒமாக இந்த சிக்கல் உருவாகியிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்படாத நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 யூன் 11 ஆந் திகதி LK 4339 ஆம் இலக்க டிப்பர் வண்டி விபத்திற்கு உட்பட்டு மின்கம்பம் ஒன்றுக்கு சேதமேற்பட்டிருந்ததுடன் மின்கம்பத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக சபையால் ரூபா 108,805 இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பம் வரையிலும் டிப்பர் வண்டியின் சாரதியிடமிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் காலாவதியாகியிருந்ததால் காப்புறுதி நிறுவனம் மூலம் நட்டத்தை மேவுகை செய்ய முடியாதிருந்தது. கொரோனா தொற்று அதிக அளவில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் அரசினால் சாரதி அனுமதிப் பத்திரங்கள் காலாவதியான நபர்களுக்காக சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தை நீடித்திருந்தது. எனினும் அத்தொகையை குறித்த சாரதியிடமிருந்தோ சாரதி அனுமதிப்பத்திரம் பரீட்சிக்கப்படாத உத்தியோகத்தர்களிடமிருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | டிப்பர் வண்டி மின் கம்பத்துடன் மோதியால் டிப்பர் வண்டிக்கு சேதம் ஏற்படாதிருந்ததுடன் மின்கம்பத்திற்கு ஏற்பட்ட சேதமான ரூபா 108,805.00 தொகை இலங்கை மின்சார சபையால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2020 மார்ச் மாதமளவில் கொரோனா தொற்று நிலைமை காணப்பட்ட நேரத்தில் சாரதியின் அனுமதிப்பத்திரம் காலாவதியாகியிருந்தது. குறித்த அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததால் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கால வரையறையின்றி இடை நிறுத்தப்பட்டிருந்ததால் சாரதி அவர்களுக்கு அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க முடியாதிருந்தது. மின்கம்பத்தின் நட்டத்தை விரைவில் செலுத்துமாறு முல்லேரியா பொலிஸ் மூலம் அறிவிக்கப் பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2021.07.14 ஆந் திகதி மாதாந்தம் பொதுச் | உரிய வேலையில் சாரதி அனுமதிப் பத்திரங்கள் காப்புறுதி மேவுகை சான்றிதழை பெற்றுக் கொள்ளல் மற்றும் வாகன கட்டுப்பாடு தொடர்பாக நிதிப் பிரமாண அறிவித்தலின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சபையின் உ(iv)70 அங்கீகாரத்தின் கீழ் இலங்கை மின்சார சபைக்கு பணம் செலுத்தப்பட்டது. பின்னர் அந்த நட்டத்தை காப்புறுதி நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு ஆவணங்கள் கையளிக்கப்பட்ட போதும் அதற்காக தேவையான சாரதி அனுமதிப்பத்திரம் இதுவரை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படவில்லை என்பதால் அது தாமதமாகியது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொட்டிகாவத்த கழிவுப் பொருள் பிரிவில் சேரும் கழிவுகளை மென்மையாக்கு வதற்காகவும் D6H வகையான வென்டோசர் இயந்திரமொன்றின் சேவையை வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த துடன் அதற்காக 2018 செப்தெம்பர் 2021 திசெம்பர் வரை வாடகை ரூபா 30,676,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நாளாந்தம் சேரும் 30 முதல் 35 தொன் அளவிலான உக்கும் கழிவுகளில் 5 தொன் அளவில் கெம்போஸ்ட் உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படுவதுடன் எஞ்சிய அளவு உக்காத 20 முதல் 25 தொன் கழிவுகளாக இருந்ததுடன் களப்புக் கழிவுகள் 10 தொன்னாக நாளாந்தம் சேரும் 45-65 தொன் அளவில் சேதனப்பசளை அல்லது உயிரியல் வாயு திட்டத்திற்காக | நாளொன்றிற்கு கழிவு பிரிவிற்கு 50-60 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் சேருவதுடன் அதில் 05 தொன் அளவிலான உக்கும் கழிவுகள் சேதனப் பசளைக்கு உட்படுத்தப்படுகின்றது. நாளொன்றில் சேரும் கொம்போஸ்ட் தவிர எஞ்சிய 35 தொன் அளவிலான கழிவுகள் திறந்த வெளியில் குவிக்கப்படுகின்றன. அக் கழிவுப் பொருள் அளவு நாளாந்தம் தள்ளப்பட வேண்டியதுடன் ஒரு நாளில் அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் கழிவுப்பொருள் மேடாக குவிகின்றது. ஆதலால் இந்த கழிவுகளை தள்ளுவது அத்தியவசிய விடயமொன்றாகும். 2018 முதல் D6H வெள்டோசர் பயன்படுத்தப்பட்டதுடன் அது அதற்கு முன்னர் D4 வகையிலான வென்டோசரொன்று | சபையின் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் முறையான வகையில் மேற்கொண்டு செலவினத்தை குறைத்து சபைக்கு வருமானம் உழைக்கக் கூடிய மற்றும் பிரதேச வாசிகளுக்கு சுற்றாடலுக்குசாதக மான நிலைமை யொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தாமை காரணமாக இவ்வாறு கழிவுகளை மென்மைப்படுத்துதல் மற்றும் அக்கழிவுகளை மூடுவதற்காக மேலதிக செலவொன்றும் செலவிட நேர்ந்திருந்தது. | பயன்படுத்தப்பட்டது. அச்செயற்பாட்டிற்காக வென்டோசரொன்று அத்தியாவசியமாக இருந்ததுடன் பல காரணங்களின் காரணமாக அதை சபைக்கு கொள்வனவு செய்ய முடியாதிருந்ததாக தயவுடன் சுட்டிக் காட்டுகின்றேன். இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டு வாடகை அடிப்படையில் பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் இச்சேவையை பெற்றுக் கொள்வதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | |
| (ஆ) | 2021 நவம்பர் 09 ஆந் திகதி வெள்டோசரின் மானியின் பிரகாரம் 9,895.1 என காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்கு முன்னர் வேலை செய்த இறுதித் திகதியாக 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி மானி இலக்கம் 2,099.8 எனவும் 5.2 மணித்தியாலம் அன்றைய நாள் வேலை செய்யப்பட்டுள்ளதாக 48649 - ஆம் இலக்க ஓட்டப் பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதியின் பின்னர் 2021 நவம்பர் 9 ஆந் திகதி மாத்திரம் வேலை செய்யப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. இக்காலப்பகுதியினுள் வேலை செய்யப்பட்ட வேலைப் காப்பாளரால் குறிப்பிடப்பட்ட போதும் அதற்கான சான்றுகள் அந்த இடத்தில் காணப்படவில்லை. | கழிவுப்பொருள் தெர்குதி ஒக்தோபர் 29 ஆந் திகதியின் பின்னர் வேலை செய்ததாக குறிப்பிடுகின்றேன். எனினும் அது தொடர்பாக எழுத்து மூலமான குறிப்பொன்று இல்லையென தயவுடன் அறிய தருகின்றேன். அந்தக் குறைபாட்டை தவிர்ப்பதற்கு எழுத்து மூலம் குறிப்புக்களை வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | சபைக்குச் சொந்தமான வளங்களை பயன்படுத்தும் போது அது தொடர்பாக தேவையான எழுத்துமூலச் சான்றுகளை வெளிப்படையாக வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |